# மனுவியல் - பாடம் - 3

## 7. தேவனின் பரீட்சையும், மனிதனின் வீழ்ச்சியும்

அநேக காலங்களுக்கு முன்பு தேவன் மனிதனைப் பரீட்சித்தார். இன்றும் அவர் மனிதனைப் பரீட்சிக்கிறார். பரீட்சையானது பரீட்சிக்கப்படுபவரிடமிருந்து ஏதோ ஒரு காரியத்தை அறிந்து கொள்ள நடத்தப்படுகிறது. தேவன் ஆதாமை சிருஷ்டித்த பின்பு, அவனுக்கு ஒரு தெரிவு செய்யும் காரியத்தை விட்டு வைத்தார். ஆதாம் சரியானவற்றைத் தெரிவு செய்தால் அதற்கான பலனைப் பெற்றுக் கொள்கிறான். பிழையானதைத் தெரிவு செய்தால் அதற்கான தண்டனையைப் பெற்றுக் கொள்கிறான். ஆதியாகமம் 2:8–17 வாக்கியங்களின்படி தேவன் ஆதாமிடமும், ஏவாளிடமும் ஒரு மரத்தின் கனியைப் புசிக்க வேண்டாம் என்று கூறியிருந்தார். அதற்கான காரணத்தை அவர் அவர்களிடம் கொடுக்கவில்லை. அப்படி அவர் கொடுக்க வேண்டிய அவசியமும் இருக்கவில்லை.

I.ஏன் தேவன் மனிதனைப் பரீட்சித்தார்?

(அ) சரியானவற்றை தெரிவு செய்யும் ஆற்றலுடன் தேவன் மனிதனை உருவாக்கினார்., மனிதன் பாவம் செய்வதைத் தெரிவு செய்யாதபடி இருப்பதே அவருடைய விருப்பமாயிருந்தது. அவன் அவரை மதிக்க வேண்டும் என்பதே அவரது வாஞ்சையாக இருந்தது. இன்றும் மனிதன் தன்னை நேசிக்கவும் தனக்கு சேவை செய்யவும் வேண்டும் என்பதே அவருடைய சித்தமாயிருக்கிறது.

(ஆ) மனிதன் தன் வார்த்தைக்குக் கீழ்ப்படிவானா அல்லது கீழ்ப்படியமாட்டானா என்பதை அவர் அறிய விரும்பினார். அவர் அவனைப் படைத்ததினால் அவனைப் பரீட்சிக்கும் உரிமையும் அவருக்கு இருந்தது.

(இ) இறைவன் எதைச் செய்தாரோ, அவற்றையெல்லாம் மனிதனுடைய நன்மைக்காகவே செய்தார். அவன் பாவம் செய்வதை தெரிவுச் செய்தபடியால், சகல மனிதரையும் தேவனை விட்டுப் பிரிந்து போகும்படி செய்தான். அன்று ஆதாம் செய்தது போல், இன்றும் மனிதன் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் இருக்கிறான்.

## II. இப்பரீட்சையில் மனிதன் என்ன செய்தான்?

பிசாசானவன் ஆதாமையும், ஏவாளையும் பாவத்தில் விழும்படி சோதிப்பதற்கு தேவன் அனுமதித்தார். இந்தச் சோதனையில் அவர்கள் பிசாசைப் பின்பற்ற முன்வந்ததினால்

தேவனுடைய பரீட்சையில் தோல்வியுற்றனர். சகல மனிதரும் ஆதாமையும், ஏவாளையும் போன்றவர்கள் தான் எனத் தேவன் அறிவார். சகலரும் ஆதாம், ஏவாளுக்குள்ளாகப் பாவம் செய்து தேவனுடைய பரீட்சையில் சித்தி பெறாமல் போய்விட்டார்கள். அவர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவில் தங்கள் நம்பிக்கையை வைக்கும் போது தான் பரீட்சையில் சித்தி பெறுகிறார்கள். மனிதனுக்கு தேவன் அவசியமானவர். அவனுக்கு அவருடைய அன்பு தேவையாக இருக்கின்றது. மனிதன் பாவத்தில் விழும் போதும் அவர் தன் அன்பை அவன்மேல் காண்பிக்கின்றார். (ரோமர்.5:20,21)

## மனிதன் தேவனுக்கு எதிராகப் பாவம் செய்தான்

மனிதன் சிருஷ்டிக்கப்பட்ட வேளையில் பிசாசானவன் தேவ சமூகத்திலிருந்து ஏற்கெனவே தள்ளப்பட்டிருந்தான். (லூக்.10:18; ஏசா.14:12–15; எசே.28:17; வெளி.12:4,9) பெருமையே அவன் வீழ்ச்சிக்குக் காரணமாயிருந்தது. (1தீமோ.3:6) வீழ்ச்சியடைந்த சாத்தான் சிருஷ்டிப்புகளில் மகுடமாகத் திகழ்ந்த மனிதனையும் வீழ்த்தி, தேவன் மேல் தனக்குள்ள வெறுப்பைக் காட்டவும், அவருடைய திட்டத்தை சீர்குலைக்கவும் தந்திரம் செய்தான். ''சர்ப்பம்'' என்னவென்று வேதாகமமே நமக்கு விடை தருகிறது. வெளி.12:9ல் ''உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம்'' என்றும், வெளி.20:2இல் ''பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பம்'' என்றும் வாசிக்கலாம். எனவே பிசாசு சர்ப்பத்தின் உருவில் ஏவாளிடம் வந்தான் எனும் முடிவுக்கு நம்மால் வரக் கூடியதாயுள்ளது. சாத்தான் தன் ஏமாற்று வித்தைக்கு ஒளியின் வேஷத்தைக் கூட தரிப்பவனாக விபரிக்கப்படுகிறான். (2கொரி.11:14.

இங்கே சர்ப்பத்தினூடாக, பலவீனமானவளான ஏவாளை அணுகுவதே சிறந்தது என்று அவன் கருதியிருக்கக் கூடும். (1தீமோ.2:13,14; 2கொரி.11:3; 1பேது.3:7) அதனால் அவன் சர்ப்பத்தினுள் பிரவேசித்து தன் வார்த்தைகளால் ஏவாளோடு பேசினான். தேவ வார்த்தை மீது சந்தேகத்தை தோற்றுவிக்கு முகமாக தேவன் உண்மையிலே இப்படிச் சொன்னாரா என்று கேட்டான். நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னதுண்டோ? என்று கேட்கிறான்.

தேவவார்த்தை மீது சந்தேகத்தை சாத்தான் இவ்விதம் தோற்றுவித்தான். தேவன் உண்மையிலே இப்படிச் சொன்னாரா என்றே அவன் கேட்டான். இது தேவனுடைய கட்டளையை முரண்படுத்தும் வாக்கியம். (ஆதி.2:16 பார்க்க) தேவனுடைய வார்த்தை சந்தேகத்துக்கிடமானதொன்று எனும் எண்ணத்தை அவள் மனதில் பிசாசு ஏற்படுத்தவே இவ்வாறு கேட்டான். தேவ வார்த்தை உண்மையானதா, அது நம்பகமானதா எனும்

சந்தேகத்தை பிசாசு தோற்றுவித்தான். ‘‘தேவர்களைப் போல் இருப்பீர்கள்’’ அதாவது இப்போதிருக்கும் நிலையை விட உயர்ந்த நிலையை அடைய முடியும் எனக் கூறினான். கண்கள் திறக்கப்படும்; அதாவது அறிய முடியாதவைகளை அறியக்கூடிய நிலையை அடைவார்கள் என்றான். மனிதனை ஏமாற்றப் பிசாசு அவனை மயக்கிய முறை இதுவாகும். ஏவாளுடைய வீழ்ச்சிக்குக் காரணம் அவள் சாத்தானுடைய வார்த்தையைத் தொடர்ந்து கேட்க ஆயத்தமாயிருந்தமையேயாகும்.

‘‘ஸ்திரீயானவள் அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும் புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது எனக் கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள். அவனும் புசித்தான்.’’ (ஆதி.3:6)

பிசாசின் கேள்விக்கு அவள் ‘‘நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம். ஆனாலும் தோட்டத்தின் நடுவில் இருக்கிற கனியைக் குறித்துத் தேவன் நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும், அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார்’’ என்றாள். (ஆதி.3:2,3) ஆனால் (ஆதி.2:16)ஐப் பார்ப்போமானால் தேவன் அப்படித் ‘‘தொட வேண்டாம்’’ என்று கூறியதாக இல்லை. ஆகவே இங்கே அவள் தேவனுடைய கட்டளையை சற்று மிகைப்படுத்திக் கூறுவதைக் காணக் கூடியதாக இருக்கிறது. தேவ கட்டளையில் அவள் செய்த இந்த மாற்றம், அவள் தேவனை விட்டு, சாத்தானின் மனப்பாங்கை சற்று ஏற்றிருக்கிறாள் என்பதை எமக்கு அறியத் தருகிறது. சாத்தானோ தந்திரமான முறையில், ‘‘நீங்கள் சாகவே சாவதில்லை. நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும் நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றான்.’’ தேவன் மனிதனுக்கு எதிரானவர் என்று எண்ண வைப்பதே சாத்தானின் தந்திரமாய் இருந்தது.

ஏவாள் இதன் பிறகு எதுவுமே பேசவில்லை. பிசாசின் வார்த்தையே அவளுடைய மனதை நிரப்பியிருந்தன. அவற்றையே அவள் சிந்தித்துக் கொண்டிருந்தாள். தேவ வார்த்தையை அவள் சிந்தித்தவளாய் இருந்திருந்தால் அவள் விழுந்து போயிருக்கமாட்டாள். பாவ சிந்தனை வரும்போது அதை உடனடியாக அகற்றி விட வேண்டும். இல்லையென்றால் அது வளர்ச்சியடைந்து பாவத்தில் நம்மை வீழ்த்தி விடும். இன்றைய மனிதன் நன்மை எதுவென்றும், தீமை எதுவென்றும் அறிந்திருக்கிறான். அதனால் அவனுடைய இதயமே அவனைக் குற்றப்படுத்தும் (ரோமர் 5:15; 1தீமோ.1:19; 1பேது.3:16; அப்.24:16; 1கொரி.10:25,27,28; எபி.10:22; 2தீமோ.4:3).

**மனிதனின் கடமை**

“உன் சிருஷ்டிகரை நினை” பிர.12:1

சிருஷ்டிகராகிய தேவனுக்குக் கனத்தையும் மகிமையையும் கொடுக்க வேண்டும் என்ற உணர்வு இயல்பிலேயே மனிதனுக்கு இருக்கிறது. ஆனால் பாவம் அவனுடைய அகக்கண்களைக் குருடாக்கி விட்டது. அதனால் தேவனுடைய காரியங்களை அவனால் புரிந்து அவருக்குக் கொடுக்க வேண்டிய கனத்தையும் மகிமையையும் செலுத்த முடியாதவனாய் இருக்கிறான். ஆகவே தான் அவன் கற்களையும் மரங்களையும் வழிபட விரும்புகிறான்.

மனிதன் தன் கடமையை உணர வேண்டும். “காரியத்தின் கடைத் தொகையைக் கேட்போமாக. தேவனுக்குப் பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள். எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே” (பிர.12:13)

## கேள்விகள்:

1. தேவன் மனிதனை பரிட்சிக்க வேண்டியதன் அவசியம் என்ன என்பதனைக் கூறுக?
2. தேவனுடைய பரிட்சைக்கு மனிதன் தந்த பதில் என்ன என்பதனைக் கூறுக.
3. மனிதனின் கடமைகள் என்னென்ன என்பதனைக் கூறுக.
4. ஆதாம் ஏவாளின் மீறுதலினால் ஏற்பட்ட விளைவுகளைப் பற்றி வேதவல்லுநர்கள் கூறுகின்ற கருத்துக்கள் என்னென்ன என்பதனைக் குறிப்பிடுக.
5. இழந்துபோன தேவசாயலை பெற்றுக்கொள்ள என்னென்ன செய்ய வேண்டும் என்பதனைக் கூறுக.
6. வீழ்ச்சியிலிருந்து எப்படி விடுதலை கிட்டுகிறது என்பதனையும், வீழ்ச்சிக்கான தேவனுடைய பரிகாரம் என்ன என்பதனையும் சற்று விளக்கமாக கூறுக.